# ராதாபுரத்தில் சமுதாய வளைகாப்பு



சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கினார் பேரவைத் தலைவர் மு.அப்பாவு.

**வள்ளியூர், நவ.18:** ராதாபுரத்தில் சமுதாய வளைகாப்பு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில் ராதாபுரத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிக்கு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமை வகித்து, 150 கர்ப்பிணி பெண்களுக்கு 5 வகையான ஊட்டசத்து உணவு, சேலை, வளையல், சுவீட்ஸ், முறுக்கு உள்ளிட்ட பொருள்களை பேரவைத் தலைவர் வழங்கினார். ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் சௌமியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மாவட்ட அலுவலர் தனலெட்சுமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஷ், புள்ளியியல் ஆய்வாளர் சண்முகசுந்தரம், ராதாபுரம் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் ஜோஸிட்டால், மேற்பார்வையாளர் ஜான் மரியசுகந்தி, மேற்கு ஒன்றிய திமுக செயலர் ஜோசப் பெல்சி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆவரைகுளம் பாஸ்கர், ஜான்ஸ் ரூபா, லிங்கசாந்தி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# செங்கோட்டையில் வடக்கு மாவட்ட அதிமுக நிர்வாகிகள் கூட்டம்



நிர்வாகிகள் கூட்டத்தில் பேசுகிறார் செ.கிருஷ்ணமுரளி எம்எல்ஏ.

**தென்காசி, நவ. 18:** தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செங்கோட்டையில் உள்ள அக்கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலர் செ. கிருஷ்ணமுரளி எம்எல்ஏ தலைமை வகித்தார். மாநில மகளிரணி துணைச்செயலர் முன்னாள் அமைச்சர் வி.எம். ராஜலெட்சுமி, மாவட்ட அவைத்தலைவர் வி.பி.மூர்த்தி, மாவட்ட இணைச்செயலர் சண்முகபிரியா, மாவட்ட துணைச்செயலர் பொய்கை சோ.மாரியப்பன், மாவட்டப் பொருளாளர் சண்முகையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், வாக்குச்சாவடி முகவர்கள், புதிய வாக்காளர்கள் சேர்ப்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதிகளைச் சேர்ந்த ஒன்றிய, பேரூர், நகரச் செயலர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மனோ கல்லூரியில் மழை நீரை அகற்றக் கோரி போராட்டம்

**சங்கரன்கோவில், நவ. 18:** சங்கரன்கோவில் அருகே மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி வளாகத்தில் தேங்கியுள்ள மழைநீரை அப்புறப்படுத்த கோரி மாணவர்கள் கப்பல் விடும் போராட்டம் நடத்தினர்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு பெய்த மழையில் கல்லூரி வளாகத்தைச் சுற்றிலும் மழை நீர் தேங்கியது. இதனால் வகுப்பறைக்குள் செல்ல மாணவர்கள் அவதிப்பட்டனர். எனவே மழை நீரை அப்புறப்படுத்த மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் இந்திய மாணவர் சங்கத்தினர், வெள்ளிக்கிழமை கல்லூரி வளாகத்தின் முன்பு தேங்கியுள்ள மழை நீரை அகற்றவும், அங்கு பேவர் பிளாக் கற்கள் பதிக்கக் கோரியும் மழை நீரில் கப்பல் விடும் போராட்டம் நடத்தினர். சங்க கிளை தலைவர் வருண்பாரத் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் அருண் கோரிக்கையை வலியுறுத்தி பேசினார். இதில் திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# பாப்பாக்குடியில் இளைஞர் கைது

**சேரன்மகாதேவி, நவ.18:** பாப்பாக்குடியில் கொள்ளை வழக்கில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த இளைஞரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

பாப்பாக்குடி காவல் சரகத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு நடைபெற்ற கொள்ளை வழக்கில் பாப்பாக்குடி அருகேயுள்ள மருதப்பபுரம் தெற்கு தெருவைச் சேர்ந்த சுரேஷ் குமார் (36) என்பவர் கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் வெளியே வந்தார். இவர் இவ்வழக்கில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்தாராம். இதையடுத்து அவரை கைது செய்யுமாறு நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 2 மாதங்களாக தலைமறைவாக இருந்த சுரேஷ்குமாரை போலீஸார் கைது வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# வீட்டின் கதவை உடைத்து நகை திருட்டு

**கடையநல்லூர்,நவ.18:** கடையநல்லூர் அருகே வீட்டு கதவை உடைத்து நகை, பணத்தை திருடியவர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

மலம்பேட்டைத் தெருவைச் சேர்ந்தவர் ராஜ்குமார். ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் தற்போது தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் இரவு காவலராகப் பணியாற்றி வருகிறார். வியாழக்கிழமை இரவு காவல் பணிக்கு சென்று விட்டு வெள்ளிக்கிழமை அவர் வீடு திரும்பினார். அப்போது, வீட்டின் கதவு மற்றும் பீரோ உடைத்து, அதிலிருந்த 18 பவுன் தங்க நகை மற்றும் ரூ.30 ஆயிரம் திருடப்பட்டது தெரியவந்தது. மேலும், கண்காணிப்பு கேமராவும் உடைக்கப்பட்டிருந்ததாம். இதுகுறித்து கடையநல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# மூலைக்கரைப்பட்டி அருகே கிணற்றில் உணவக உரிமையாளர் சடலம் மீட்பு

**களக்காடு, நவ. 18:** திருநெல்வேலியில் உள்ள பிரபல உணவக உரிமையாளர் ராஜநாராயணன் (59), மூலைக்கரைப்பட்டி அருகே கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

மூலைக்கரைப்பட்டி அருகேயுள்ள கூந்தன்குளத்தைச் சேர்ந்த அவர், திருநெல்வேலி சந்திப்பு பகுதியில் உணவகம் நடத்தி வந்தார். திருநெல்வேலி பாலபாக்யா நகரில் குடியிருந்து வந்தார்.

கடந்த 6 மாதங்களுக்கு முன் அவருக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. கடந்த 16ஆம் தேதி தனது காரில் கூந்தன்குளம் சென்ற அவர், பின்னர் திருநெல்வேலி திரும்பிக் கொண்டிருந்த போது, திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதையடுத்து, தனது மகன் குருசங்கரை தொடர்பு கொண்டு, தன்னை அழைத்துச்செல்லுமாறு தெரிவித்தாராம்.

இந்நிலையில், கூந்தன்குளம் சாலையோரம் உள்ள கிணற்றில் ஆண் சடலம் கிடப்பதாக அக்கம் பக்கத்தினர் தெரிவித்த தகவலையடுத்து, மூலைக்கரைப்பட்டி போலீஸார், நான்குனேரி தீயணைப்புத் துறையினர் சென்று சடலத்தை மீட்டனர். சடலமாகக் கிடந்தவர் ராஜநாராயணன் என்பது தெரியவந்தது. பிரேத பரிசோதனைக்குப் பின் குடும்பத்தினரிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து மூலைக்கரைப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர் மழை: கடனாநதி அணை நிரம்பியது



கடனாநதி அணை நிரம்பியதையடுத்து வழிந்தோடி வழியாக வெளியேற்றப்படும் நீர்.

**அம்பாசமுத்திரம், நவ.18:** மேற்குத் தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழையால் வெள்ளிக்கிழமை கடனாநதி அணை நிரம்பியது. இதையடுத்து வழிந்தோடி வழியே உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி இரண்டு வாரங்களுக்கு மேல் பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருவதையடுத்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தென்காசி மாவட்டத்தில் உள்ள 85 அடி கொள்ளளவு கொண்ட கடனாநதி அணையில் வெள்ளிக்கிழமை காலை நீர்மட்டம் 83 அடியானது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 165 கனஅடியாக இருந்தது. இதையடுத்து பாதுகாப்பு கருதி காலை 7 மணிக்கு அணையின் வழிந்தோடி வழியாக அணைக்கு வரும் 165 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. மாலை 3 மணி நிலவரப்படி அணையின் நீர்வரத்து மற்றும் வெளியேற்றம் விநாடிக்கு 270 கனஅடியாக இருந்தது.

வெள்ளிக்கிழமை காலை நிலவரபடி பிற அணைகள் நிலவரம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 93.90 அடியாகவும், நீர்வரத்து 2602.20 கனஅடியாகவும் வெளியேற்றம் 517.25 அடியாகவும் இருந்தது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 111.61 அடியாக இருந்தது.

மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 78.35 அடியாகவும், நீர்வரத்து 383 அடியாகவும் வெளியேற்றம் 35 கனஅடியாகவும் இருந்தது. கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 48 அடியாகவும் நீர்வரத்து 49 கனஅடியாகவும் வெளியேற்றம் 60 கனஅடியாகவும் இருந்தது.

ராமநதி அணையின் நீர்மட்டம் 81.50 அடியாகவும் நீர்வரத்து 274.60 கனஅடியாகவும், வெளியேற்றம் 40 கனஅடியாகவும் இருந்தது. கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 59.77 அடியாகவும் நீர்வரத்து 126 கனஅடியாகவும் வெளியேற்றம் 25 கனஅடியாகவும் இருந்தது. குண்டாறு அணையின் நீர்மட்டம் 36.10 அடியாகவும் நீர்வரத்து மற்றும் வெளியேற்றம் 41 கனஅடியாகவும் இருந்தது. அடவிநயினார் கோயில் அணையின்நீர்மட்டம் 84.50 அடியாகவும் நீர்வரத்து 75 கன அடியாகவும் வெளியேற்றம் 35 கனஅடியாகவும் இருந்தது.

**மழையளவு (மில்லிமீட்டரில்):**

**திருநெல்வேலி மாவட்டம்...** பாபநாசம்- 48, சேர்வலாறு -37, மணிமுத்தாறு -9.8, கன்னடியன் அணைக்கட்டு- 4.2, அம்பாசமுத்திரம்- 2, களக்காடு- 3.2, கொடுமுடியாறு- 7, நம்பியாறு -10, மாஞ்சோலை- 37, காக்காச்சி- 20, நாலுமுக்கு- 11, ஊத்து- 15.

**தென்காசி மாவட்டம்...** தென்காசி- 20, செங்கோட்டை- 85.2, ஆய்க்குடி-10, கடனாநதி -34, ராமநதி- 26, கருப்பாநதி -17.5, குண்டாறு- 56.6, அடவிநயினார் கோயில்- 31, சங்கரன்கோயில் -1.

# ஆலங்குளம் அரசு மகளிர் கல்லூரி: புதிய கட்டடப் பணிகள் ஆய்வு



கல்லூரி கட்டுமானப் பணியை ஆய்வு செய்த தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலர் பொ. சிவபத்மநாதன்.

**ஆலங்குளம், நவ.18:** தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்று வரும் கட்டடப் பணிகளை மாவட்ட திமுக செயலர் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

ஆலங்குளம் – தென்காசி சாலையில் கழுநீர்குளம் கிராமத்துக்குள்பட்ட பகுதியில் ரூ.11.33 கோடி மதிப்பீட்டில் அரசு மகளிர் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப் பணிகளை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலர் பொ.சிவபத்மநாதன் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கீழப்பாவூர் ஒன்றியக் குழுத் தலைவர் காவேரி சீனிதுரை, ஆலங்குளம் ஒன்றிய திமுக செயலர்கள் செல்லத்துரை, அன்பழகன், கீழப்பாவூர் ஒன்றியச் செயலர் சீனிதுரை, கழுநீர்குளம் ஊராட்சித் தலைவர் கை.முருகன், நகரச் செயலர்கள் ஆலங்குளம் எஸ்.பி.டி.நெல்சன், கீழப்பாவூர் ஜெகதீசன், தொழிலதிபர் மணிகண்டன், பொறியாளர்கள் சரத்குமார், நல்லசிங் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# சிவகிரி பகுதியில் இன்று மின்தடை

**கடையநல்லூர், நவ. 18:** விஸ்வநாதபேரி உபமின் நிலைய பராமரிப்புப் பணிகள் காரணமாக, சிவகிரி வட்டாரப் பகுதிகளில் சனிக்கிழமை மின் விநியோகம் தடைபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகிரி, தேவிபட்டணம், விஸ்வநாதபேரி, தெற்கு சத்திரம், வடக்கு சத்திரம், வழிவழிகுளம், ராயகிரி, மேல கரிசல்குளம், கொத்தாடைப்பட்டி, வடுகப்பட்டி, சுற்றுப்புறப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என கடையநல்லூர் கோட்ட செயற்பொறியாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.

# புளியங்குடியில் நகராட்சி மண்டல இயக்குநர் ஆய்வு

**கடையநல்லூர்,நவ.18:** புளியங்குடி நகராட்சிக்குள்பட்ட பகுதிகளில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் விஜயலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உரம்தயாரிப்புநிலையம்,திடக்கழிவுமேலாண்மை திடல், தினசரி சந்தை பகுதி போன்றவற்றை பார்வையிட்டு ஆய்வுசெய்த அவர், பணிகளை விரைவுபடுத்த அறிவுறுத்தினார். புளியங்குடி நகர்மன்றத் தலைவர் விஜயாசௌந்தரபாண்டியன், நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் இளங்கோவன் , நகராட்சி ஆணையர் சுகந்தி , பொறியாளர் முகையதீன்அப்துல்காதர், சுகாதார ஆய்வாளர்கள் கைலாசசுந்தரம், கணேசன் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.


**SALE NOTICE**
**M/s. DEEPSEA DEVELOPERS PRIVATE LIMITED**
**(IN LIQUIDATION)**
**Registered Office:** C-98, Sipcot Industrial Complex, Harbour Express Road, Tuticorin, Thoothukudi - 628008
**Liquidator: Chandramouli Ramasubramaniam (C.RAMASUBRAMANIAM)**
**Liquidator Address:** 'Raji', 3B1, 3rd Floor, Gaiety Palace, No. 1I, Blackers Road, Mount Road, Chennai-600002
**Email:** fcs.rms@gmail.com, srinidhicra@gmail.com | **Cont. No:** 044-28528292, 42606292

**E- Auction**
Sale of Assets under Insolvency and Bankruptcy Code, 2016
**Date and Time of Auction: Wednesday ,07th December, 2022 at 03.00 PM to 04.00 PM**
(With unlimited extension of 5 minutes each)

Sale of assets and properties owned by **M/s. DEEPSEA DEVELOPERS PRIVATE LIMITED** (In Liquidation) forming part of Liquidation Estate by the Liquidator, appointed by the Hon'ble National Company Law Tribunal, Chennai Bench vide order MA/1062/2019 in CP/1153/IB/2018 dated 26th November, 2019. The sale will be done by the undersigned through the e-auction platform **WWW.BANKAUCTIONS.IN**

| Asset | Reserve Price | Earnest Money Amt. |
|---|---|---|
| **SINGATHAKURICHI TO CHEKKARAKUDI ROAD, SINGATHAKURICHI VILLAGE & PANCHAYAT, KARUNGULAM PANCHAYAT UNION, SRIVAIKUNTAM TALUK, THOOTHUKUDI DISTRICT,** Survey Nos. 336/1, 343/2, 358/2, 361/3, 362/1C, 365, 370/1, 370/2, 373/1, 374,375/1, 384/1A, 384/1B, 385/2, 386/1, 407/1, 407/2, 408/1B, 408/2, 413/1A, 419/3A, 423/1, 423/2, 428/1A, 429/1, 429/2, 429/3, 429/4, 654/2, 658/2B, 685/2, 696, 700/1 PT., 704/1A, 712/2A2, 714/1A3, ( Vacant Land 55.80 Acres) TOTAL – 55.80 Acres | Rs. 76,44,488/- | Rs. 7,64,448/- |

**Terms and Condition of the E-Auction are as under:**

1. E-Auction will be conducted on **"AS IS WHERE IS", "AS IS WHAT IS" AND "WHATEVER THERE IS BASIS"** as such sale is without any kind of warranties and indemnities through approved service provider **M/s. 4CLOSURE.**
2. The highest offer received from E-Auction will be declared successful. The Liquidator reserves the right to choose in announcing the successful bidder based on the highest bid received.
3. The EMD shall be payable through DD/NEFT/RTGS in the account of **Deepsea Developers Private Limited In Liquidation Account, A/c. No. 510909010138984 Bank and Branch: City Union Bank Limited Anna Salai Branch and IFSC Code: CIUB0000049**
4. The Bids can be submitted through email or can be submitted at the Liquidator's office before 6.00 PM on Monday, 05th December 2022. The bid form can be downloaded from the website of **WWW.BANKAUCTIONS.IN**
5. Last date and time of submission of EMD & Tender documents is 6.00 p.m. on **Monday, 05th December, 2022.**
6. The date and time of e-Auction on **Wednesday, 07th December, 2022 between 03.00 P.M and 04.00 P.M.**
7. If any offer is received within the last 5 minutes of closure time, the biding time will be extended automatically by another 5 minutes and if no higher bid is received within in the extended 5 minutes, the auction will automatically get closed at the extended 5 minutes.
8. The intended bidder who have deposited EMD and require assistance in creating login id and password may contact the liquidator office on phone 044 - 28528292, 42606292 through email at **fcs.rms@gmail.com** & for technical support, you can contact Mr. Subbarao @ 08142000061
9. The EMD amount of unsuccessful Bidders will be refunded within one week.
10. The bidder who submits highest offer (more than Reserve Price) on closure of online auction shall be declared successful bidder subject to approval by the Liquidator. The liquidator reserves his rights to reject any or all of the offers or accept offer for one or more properties received without assigning any reasons whatsoever at any stage.
11. If none of the intended bidder participating in the E-Auction has not increasing the bid amount, the EMD amount of the bidders will be forfeited.
12. Upon confirmation of sale, the purchaser shall deposit 25% of sale price (including EMD) immediately and the balance sale consideration within 90 days of the date of such demand, provided that payment made after 30 days shall attract interest at the rate of 12% as per Sub Regulation 12 of Regulation 1 of Schedule I of IBBI (Liquidation Process) Regulations 2016 as amended from time to time.
13. The sale shall be cancelled if the payment is not received within 90 days and the amount paid will be forfeited. For more particulars about e-auction, the bidders are requested to go through the tender form thoroughly.
14. The highest bidder would bear the applicable GST, charges/fees payable for ownership transfer, registration fee etc., as applicable under law. The Liquidator will not be responsible for any charge, lien under sale. The Liquidator has absolute right to accept or reject the bid or adjourn, postpone, extend the auction without assigning any reasons whatsoever. No objections will accrue to the Liquidator in such an event.
15. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam, Liquidator (044-28528292, 42606292).
16. Further inquiries, if any and/or terms and conditions for sale can be obtained from the Liquidator office at phone numbers mentioned above.
17. The advertisement will be valid for 90 days from the date of advertisement. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam (044 - 28528292, 42606292)

**Date:** 19.11.2022
**Place:** Chennai

Sd/-
**CHANDRAMOULI RAMASUBRAMANIAM (C.RAMASUBRAMANIAM)**
LIQUIDATOR- DEEPSEA DEVELOPERS PRIVATE LIMITED
'RAJI', 3B1, 3rd Floor, Gaiety Palace, No. 1I, Blackers Road, Mount Road, Chennai-600002.
**Email:** fcs.rms@gmail.com, srinidhicra@gmail.com | **Contact No:** 044 - 28528292, 42606292
**AFA Valid upto:** 13.11.2023


# வ.உ.சி நினைவு தினம்: படத்துக்கு மரியாதை



சுரண்டை நகர காங்கிரஸ் அலுவலகத்தில் வ.உ.சி. படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் எம்எல்ஏ சு.பழனிநாடார். உடன், சுரண்டை நகர்மன்றத் தலைவர் ப.வள்ளிமுருகன் உள்ளிட்டோர்.

**அம்பாசமுத்திரம்/வள்ளியூர்/ சங்கரன்கோவில், நவ. 18:** சுதந்திரப் போராட்ட தியாகி வஉசியின் நினைவு நாளையொட்டி, அவரது படத்துக்கு பல்வேறு அரசியல் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

ஆழ்வார்குறிச்சி சைவ வேளாளர் சங்கத்தில் உள்ள வ.உ.சி. உருவப் படத்துக்கு சங்கத் தலைவர் சு.முருகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இதில், சங்க நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆழ்வார்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வ.உ.சி. படத்துக்கு பாஜ நகரத் தலைவர் முத்தையா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**வள்ளியூர்:** பணகுடி சைவ வேளாளர் சங்கம் சார்பில் பேருந்து நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த வ.உ.சி படத்துக்கு, சைவ வேளாளர் சங்க நிர்வாகிகள் மு.சங்கர், இளங்கோ, இசக்கியப்பன், முருகன், நம்பிராஜன், ஆறுமுகம், அருணாச்சலப் பிள்ளை உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**சங்கரன்கோவில்:** சங்கரன்கோவிலில் வ.உ.சி. அறக்கட்டளை சார்பில் பிரதான சாலையில் அவரது உருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டது. அந்தப் படத்துக்கு திமுக சார்பில் அதன் வடக்கு மாவட்டச் செயலர் ஈ. ராஜா எம்.எல்.ஏ, அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் வி.எம். ராஜலட்சுமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இதைத் தொடர்ந்து வ.உ.சி. அறக்கட்டளையினர், பாஜக, மதிமுக, பார்வர்ட் பிளாக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

# புதுமை பெண் திட்டம் குறித்த கருத்தரங்கு




புதுமை பெண் திட்டம் குறித்த கையேடு வெளியிடும் நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

**சேரன்மகாதேவி, நவ.18:** சேரன்மகாதேவி ஸ்காட் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் புதுமை பெண் திட்டம் குறித்த கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்குக்கு, கல்லூரி முதல்வர் எஸ். சுந்தர்ராஜன் தலைமை வகித்து திட்டம் குறித்த கையேட்டை வெளியிட்டார். இத்திட்டத்தில் அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயின்று இக்கல்லூரியில் முதலாண்டு பயிலும் 13 மாணவிகளுக்கு முதல்கட்டமாக திட்டம் குறித்த கையேடு வழங்கி விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில், கல்லூரி கணினித் துறை இயக்குநர் மு. முகம்மது சாதிக், ஸ்காட் வளாக துணைப் பொது மேலாளர் ஜெ. மணிமாறன், நிர்வாக அதிகாரி எஸ். ஜெயப்பாண்டி, பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



**20** killed in road accident in Pakistan's Sindh province when a van fell into a deep ditch filled with flood water

GLOBAL WEATHER

| City | | | | City | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Beijing | 16 | 1 | TDS | Los Angeles | 24 | 8 | LC |
| Colombo | 29 | 24 | LC | Melbourne | 22 | 12 | HR |
| Dhaka | 31 | 21 | TDS | Moscow | -2 | -3 | HR |
| Dubai | 32 | 26 | SNY | New York | 5 | -1 | LC |
| Houston | 9 | 6 | SNY | Singapore | 31 | 25 | TDS |
| Istanbul | 22 | 17 | LC | Toronto | -1 | -4 | LC |
| London | 9 | 5 | LC | Washington | 7 | -2 | LC |

LR: Light Rain HR: Heavy Rain SW: Snow TDS: Thundershower LC: Light Cloud SNY: Sunny

# BIDEN SHIELDS MBS FROM LEGAL ACTION IN US

Recommends immunity in civil case brought against him over Khashoggi's murder

**WASHINGTON**

THE US government recommended on Thursday that Saudi Crown Prince Mohammed bin Salman was immune from legal action over the 2018 murder of a dissident journalist, according to court documents.

Prince Mohammed was named prime minister by royal decree in late September, sparking suggestions he was looking to skirt exposure in cases filed in foreign courts — including a civil action brought in the US by Hatice Cengiz, fiancee of slain *Washington Post* columnist Jamal Khashoggi.

The killing four years ago of Khashoggi, a Saudi insider-turned-critic, in the kingdom's Istanbul consulate temporarily turned Prince Mohammed — widely known as MBS — into a pariah in the West.

His lawyers previously argued that he "sits at the apex of Saudi Arabia's government" and thus qualifies for the kind of immunity US courts afford foreign heads of state and other high-ranking officials.



Mohammed bin Salman

The United States government had until Thursday to offer an opinion on that matter, if it chose to offer one at all. Its recommendation is not binding on the court.

"The United States respectfully informs the Court that Defendant Mohammed bin Salman, the Prime Minister of the Kingdom of Saudi Arabia, is the sitting head of government and, accordingly, is immune from this suit," read the submission to the US District Court for the District of Columbia, from the administration of President Joe Biden. But it added that "the Department of State takes no view on the merits of the present suit and reiterates its unequivocal condemnation of the heinous murder of Jamal Khashoggi."

The recommendation sparked fury among supporters of Cengiz's action, including representatives of Democracy for the Arab World Now (DAWN), the US-based NGO that Khashoggi founded.

"The Biden admin went out of its way to recommend immunity for MBS and shield him from accountability," said DAWN's executive director Sarah Leah Whitson. "Now that Biden has declared he's got total impunity, we can expect MBS's attacks against people in our country to escalate even further."

Agnes Callamard, secretary general of Amnesty International, called the recommendation a "deep betrayal."

Prince Mohammed, who has been the kingdom's de facto ruler for several years, previously served as deputy prime minister as well as defence minister under his father King Salman. *AFP*


**KERALA WATER AUTHORITY e-Tender Notice**
Tender No : T No.78&79/2022-23/SE/Q

JAL JEEVAN MISSION-WSS to Thrikkaruva ,Panayam ,Perinad and Mundrothuruthu Panchayats - Phase II- Package II-Providing FHTCs ,distribution network , Construction & Commissioning of OHSR in Panayam, Perinadu Panchayat in Kollam District EMD : Rs. 500000 Tender fee : Rs. 15000+2700 (18% GST-It will be paid by the contractor on reverse charge basis while filing his returns) Last Date for submitting Tender : 07-12-2022 02:00-pm Phone : 04742745293
Website : **www.kwa.kerala.gov.in, www.etenders.kerala.gov.in**

KWA-JB-GL-6-1069-2022-23 — Superintending Engineer, PH Circle, Kollam

**AFFIDAVIT**

I, **JC-274449F** Rank: **SUB (Hony Lt) T.Victor Raj** residing at 6/135F, Pilankalaivilai House, Adaikkakuzhi PO,Killiyoor Taluk,K.K.Dist.,TN,Pin-**629153** hereby declare that my wife **Jolly** shall hereafter be known only as **Jolly T.V** and date of birth **30 Jul 1983**,as per affidavit dated 02 Nov 2022 before Notary public Advocate /Commissioner of oath at Kuzhithurai, K.K.Dist.,TN

T.Victor Raj

**PUBLIC NOTICE**

I, Ex.Army No.JC438842H, Rank: **SUBEDAR** Name: **S.MANTHIRAM**, Son of **M.Subbiah Pillai**, That my wife's correct name is **PETCHIAMMAL.M.** But, my Army Discharge Book and PPO wrongly mentioned in my wife's name is **PACHIAMMAL**, That my wife correct name is **PETCHIAMMAL.M.**

**S.MANTHIRAM,**
No.3/208, West Street, Melakoottudankadu, Thoothukudi - 628 103, Tamilnadu State.

**THE FERTILISERS AND CHEMICALS TRAVANCORE LIMITED**
FACT — PIONEERS IN PROGRESS
(A Government of India Enterprise) Regd. Office: Eloor
CORPORATE MATERIALS, FACT-PD ADMINISTRATION BUILDING, UDYOGAMANDAL, KOCHI- 683 501 (KERALA)
Tel: (0484) – 256 8273/ 8260
E-mail: noble@factltd.com; aneeshya@factltd.com Website: http://www.fact.co.in

**TRANSPORTATION OF BAGGED PRODUCTS BY ROAD**

Enquiry No. MM/181/E24695-3 dtd. 18.11.2022

FACT invites Online Bids (TWO PART) for Road Transportation of bagged products from FACT production units at Udyogamandal and Ambalamedu to various destinations of specified districts in Kerala & Tamil Nadu through https://eprocure.gov.in, for 2 years. Estimated quantity: **43,800 MT.**
Any change / Extensions to this tender will be informed only through CPP e-procurement portal / FACT website and will not be published in newspapers.
Due date/ time for submission of bids is **03.12.2022 / 3.00 P.M.**
Hindi Version is published in our website www.fact.co.in.

Sr. Manager (Materials)T&S-C

**CHANGE OF NAME**

I, **A Jameela Beevi** W/o **M.Nagoorkhan**, Ex.Service No.13873662M Ex.Nk (TS) residing at No:2/101- Bismi New Street, Puliyanvilai, Madhavalayam, Thovalai Taluk, Kanyakumari District, Pin- 629 302 hereby declare that I shall hereafter be known as only as **Jameela Beevi N**

**Jameela Beevi N**
(New Name)

**CHANGE OF NAME**

I, **STANLY JOSEPH SOPHIA EVANGELINE**, W/o. Stanley Joseph, Born on 21.05.1966, (Native District: Kanyakumari), residing at 36-A1, Athimicheal Street, Old State Bank Colony, RV Puram, Nagercoil-629 001, Kanyakumari District, Tamil Nadu shall henceforth be known as **SOPHIA STANLEY S.**

**STANLY JOSEPH SOPHIA EVANGELINE**
Nagercoil, 18th November 2022

**PSPCL Punjab State Power Corporation Limited**
**Regd. Office: PSEB Head Office, The Mall, Patiala-147001**
**Corporate Identity No. (CIN) : U40109PB2010SGC033813, Website : www.pspcl.in**
**(Contact Number. 9646123323)**

**Tender Inquiry No. PPR-28/2022** — **Dated: 17.11.2022**

Chief Engineer / PP&R Organization, Shed No.D-3, Shakti Vihar, PSPCL, Patiala invites E-tender under three part bid system for supply of electrical energy from interstate / intrastate sources viz. Generators, Traders having Valid Inter State Trading License issued by CERC for interstate trading of energy, intrastate trading license issued by PSERC for intrastate trading of energy, State Electrictiy Boards, State Electricity Utilities, States, IPPs & CPPs from 1st Dec 2022 to 31st Mar 2023. The link for the e-Bidding portal is **www.mstcecommerce.com** and is also available on the website of Ministry of Power **(www.Powermin.nic.in)** and PFC Consultancy Limited (www.pfcindia.com). For detailed NIT & tender specifications please refer to **www.mstcecommerce.com** from 17.11.2022 onwards.

**Note:-** Corrigendum and addendum, if any will be published online at **www.mstcecommerce.com**

**610/C-438/22-11/18/2022**
**76155/12/1229/2021/18661**

**Aptus Value Housing Finance India Ltd**
APTUS
88, Doshi Towers, 205, Poonamalle High Road, Kilpauk, Chennai-600 010.Telephone: 044-4565 0003

**Possession Notice Appendix IV (rule8 (1) of the SARFAESI Act**

Whereas, the undersigned being the authorized officer of **Aptus Value Housing Finance India Ltd** under the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and in exercise of powers conferred under Section 13(2) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued **demand notice dated 05-07-2022 calling upon the borrowers 1.Mr.M. Visvambaran, 2. Mrs.P. Padmini & 3. Mr. Shibu Kumar to repay the amount mentioned in the notice being for SME Loan in Loan No: A1451820015000 of Rs. 5,70,163/- (Rupees Five Lakhs Seventy Thousand One Hundred and Sixty Three Only)** within 60 days from the date of receipt of the said notice.
The borrowers having failed to repay the amount, notice is hereby given to the borrowers and the public in general that the undersigned has taken **"Symbolic Possession"** of the property described herein below in exercise of the powers conferred on him/her under Section 13(4) of the said Act read with Rule 8 of the said rule **on this 14th day of November, 2022.**
The borrowers in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of Aptus Value Housing Finance India Ltd for an amount of **Rs. 6,16,010/- (Rupees Six Lakhs Sixteen Thousand and Ten Only) as on 14.11.2022** and interest thereon.
The borrower's attention is invited to provisions of Sub-Section (8) of Section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets

**Description of the Immovable Property:-**

All that piece and parcel of land and building situated at Item No. 1 Document No. 1857/1991: Schedule of the Property: Kanyakumari District, Marthandam Registration District , Thiruvattar Sub- District, Kalkulam Taluk, Thiruvattar Village, Thiruvarambu Desam & Karaipatru, Old S.No. 1111, R.S.No. 182/2 consists One Hectare 42 Acr, portion consists 6 acr and 50 Sq.meter, in which Northern end East side 1.5 cents (654 sq. ft) of land with building bounded by:- **Boundaries: North By:** Road, **South By:** Property owned by Devadhason, **East By:** Property owned by Pappukutty, Asari(Now item no.2) **West By:** Property owned by Devadhason.
**Item No. 2** Document No. 164/1997 Schedule of the Property: Kanyakumari District, Marthandam Registration District , Thiruvattar Sub- District, Kalkulam Taluk, Thiruvattar Village, Thiruvarambu Desam & Karaipatru, Old S.No. 1111, R.S.No. 182/2B consists One Hectare 33 Acr, in which 1 cents(435.6 sq. ft) of land with building bearing door no. 1-69 bounded by:- **Boundaries: North By:** Road, **South By:** Property owned by Visuvambaran Asari, **East By:** Road, **West By:** Property owned by Visuvambaran Asari(Item No.1)

**Date: 14.11.2022** — **Sd/- Authorised Officer**
**Place: Kanyakumari** — **Aptus Value Housing Finance India Ltd**

**BRUHAT BENGALURU MAHANAGARA PALIKE**
**Office of the Executive Engineer, Lakes-2 Division, Room No. 309, 3rd Floor, New Building, BBMP, N.R. Square, Bengaluru- 560 002.**

**No.: EE-6(Lakes)/Corr-1/2022-23** — **DATE: 18.11.2022**

**CORRIGENDUM**

Tender published in this newspaper on 30.10.2022 vide **Ref. No: EE-2/Lakes/TN-07/2022-23, Dtd : 29.10.2022** is hereby postponed due to technical reasons and further are as follows:
**1)** Pre-Bid Meeting : **23.11.2022 at 3.00 p.m. 2)** Last date for uploading the filled Tender Document : **05.12.2022 upto 16.00 hrs. 3)** Date of Opening of Technical Bids: **07.12.2022 at 16.10 hrs.** All Other terms and conditions remains the same.

**Sd/- Executive Engineer, Lakes-2 Division.**

**KERALA WATER AUTHORITY e-Tender Notice**
Tender No : 118-123/2022-23/KWA/PHC/D3/TVM

JJM 2022-2024-Kallara Scheme-Phase 3-SLSSC3-Distribution System-Providing Pipelines and Pipeline Extensions and 880,880,884,1000,1000,1000 Funcional Household Tap Connections in various wards and Miscellaneous connections of Vembayam Grama Panchayath EMD : Rs. 50000/- for 118,119,120 & Rs 1,00,000/- for 121,122,123 Tender fee : Rs. 5000/- for 118,119,120 & Rs 7,500/- for 121,122,123 Last Date for submitting Tender : 29-11-2022 03:00-pm Phone : 04712722303
Website : **www.kwa.kerala.gov.in, www.etenders.kerala.gov.in**

KWA-JB-GL-6-1067-2022-23 — Superintending Engineer, PH Circle, Thriuvananthapuram

**PSPCL Punjab State Power Corporation Limited**
Regd. Office: PSEB Head Office, The Mall, Patiala - 147001.
Corporate Identity Number U40109PB2010SGC033813, Website : www.pspcl.in
(Contact No.96461-18774)

Tender Enquiry No. MQP-207/2022-23/PR — Dated : 18.11.2022

CE/Metering, PSPCL, C-3, Shakti Vihar, PSPCL, Patiala invites E-tender for Procurement of 28,000 1-in-1 Metal Meter Boxes (Cabinets) for incorporating Three Phase Energy Meters. For detailed NIT & Tender Specification please refer to **https://eproc.punjab.gov.in** from 18.11.2022 (04:00 PM onwards).

**Note:-** Corrigendum and amendments, if any, will be published online at **https://eproc.punjab.gov.in**.

**611/C-439/22-11/18/2022**
**76155/12/1230/2021/18684**

**KERALA WATER AUTHORITY e-Tender Notice**

Tender No : 1.42 /2022-23/SE/PHC/CHN 2 . 43/2022-23/SE/PHC/CHN 3 . 44/2022-23/SE/PHC/CHN 4 . 45 /2022-23/SE/PHC/CHN 5. 46/2022-23/SE/PHC/CHN 6. 47/2022-23/SE/PHC/CHN 7.Re-E-Tender No.48 /2022-23/SE/PHC/CHN 8.49 /2022-23/SE/PHC/CHN 9.50/2022-23/SE/PHC/CHN
**Jal Jeevan Mission (JJM)- 1**. WSS to Kanjoor,Sreemoolanagaram, Chengamanad, Nedumbassery and Parakkadavu Panchayaths- in Parakkadavu Panchayath., **2**. WSS to mazhuvannur Aikkaranadu and kunnathunadu panchayath- Mazhuvannoor Panchayath-**Kadakkanadu Zone 3**. WSS to Vengoor, Asamannoor & Mudakkuzha panchayaths - Vengoor Panchayath Part-II Munippara zone, **4.** WSS to Vengoor, Asamannoor & Mudakkuzha panchayaths- Vengoor Panchayath Part-II Vakkuvalli zone- ,**5.** WSS to Mazhuvannur Aikkaranadu and Kunnathunadu panchayath- in Mazhuvannur Panchyath-Veettoor Zone, **6.** WSS toThuravur and Manjapra Panchayth Ph 2- in Thuravur Panchayath, **7.** WSS to Edathala,Keezhmad and Choornikkara panchayath - in Keezhm ad Panchayath - Part III, **8.** WSS to Vengoor, Asamannoor & Mudakkuzha panchayaths - in Mudakkuzha panchayath, and **9,** WSS to Aikkaranadu,Mazhuvannur and Kunnathunadu panchayath- in Aikkaranadu Panchayath- Providing Distribution Networks, Providing FHTCs ,Road Restoration Works and Pipeline Works etc,.
EMD : Rs. 1. 500000/- 2. 500000/- 3. 500000/- 4. 500000/- 5, 500000/- 6, 500000/- 7.500000/-8.500000/- 9.500000/-Tender fee : Rs. 1 .17700 2..17700 3. 17700 4.17700 5.17700 6. 17700 7. 17700 8.17700 9.17700
Last Date for submitting Tender : 09-12-2022 03:00-pm Phone : 04842364503
Website : **www.kwa.kerala.gov.in, www.etenders.kerala.gov.in**

KWA-JB-GL-6-1049-2022-23 — Superintending Engineer, PH Circle, Kochi

**MALABAR CANCER CENTRE**
**(POST GRADUATE INSTITUTE OF ONCOLOGY SCIENCES & RESEARCH)**
NABH Accredited (an autonomous centre under Government of Kerala
Thalassery, Kannur, Kerala - 670 103,Phone :+91 490 2399244/257, 2355881
Fax: 91 490 2355880,Email: mcctly@gmail.com, Web: www.mcc.kerala.gov.in

MCC/543/2022-P4-GAD — **TENDER NOTICE** — 18/11/2022

Competitive Tenders/e-Tenders/Re e-Tenders (One/Two cover systems) are invited from established manufacturers/authorized suppliers through www.etenders.kerala.gov.in for the supply of the following items in Malabar Cancer Centre, Thalassery.

| Sl. No | Item Details | Tender ID |
|---|---|---|
| 1 | Laryngoscopes (Adult & Pediatric) | MCC/547/2022-P2-GAD |
| 2 | Germanium-Gallium Generator | 2022_MCC_508121_2 |
| 3 | Microarray Experiment 16 samples | 2022_MCC_518110_2 |
| 4 | Backup Server with Storage and Automatic back-up software | 2022_MCC_527914_1 |
| 5 | Wi-Fi facility and PA System | 2022_MCC_527992_1 |
| 6 | Wide field Neonatal Digital Retinal Imaging System | 2022_MCC_508171_2 |
| 7 | Dental Chair on Buyback basis | 2022_MCC_518339_2 |
| 8 | Surgical Instruments (Ocular Oncology Division) | 2022_MCC_516697_2 |
| 9 | Platelet Agitator | 2022_MCC_529623_1 |
| 10 | Surgical Instruments (Surgical Oncology Division) | 2022_MCC_516570_2 |
| 11 | Suction Machine (02 Nos) | 2022_MCC_530431_1 |
| 12 | Advanced Anaesthesia Workstation (01 No) and Anaesthesia Workstation (01 No) | 2022_MCC_530680_1 |

For details visit: www.mcc.kerala.gov.in or contact Purchase Division — Sd/- Director

**SALE NOTICE**
**M/s. DEEPSEA DEVELOPERS PRIVATE LIMITED**
**(IN LIQUIDATION)**
**Registered Office:** C-98, Sipcot Industrial Complex, Harbour Express Road, Tuticorin, Thoothukudi - 628008
**Liquidator: Chandramouli Ramasubramaniam**
**(C.RAMASUBRAMANIAM)**
**Liquidator Address:** 'Raji', 3B1, 3rd Floor, Gaiety Palace, No. 11, Blackers Road, Mount Road, Chennai-600002
**Email:** fcs.rms@gmail.com, srinidhicra@gmail.com | **Cont. No:** 044-28528292, 42606292

**E- Auction**
Sale of Assets under Insolvency and Bankruptcy Code, 2016
**Date and Time of Auction: Wednesday ,07th December, 2022 at 03.00 PM to 04.00 PM**
(With unlimited extension of 5 minutes each)

Sale of assets and properties owned by **M/s. DEEPSEA DEVELOPERS PRIVATE LIMITED** (In Liquidation) forming part of Liquidation Estate by the Liquidator, appointed by the Hon'ble National Company Law Tribunal, Chennai Bench vide order MA/1062/2019 in CP/1153/IB/2018 dated 26th November, 2019. The sale will be done by the undersigned through the e-auction platform **WWW.BANKAUCTIONS.IN**

| Asset | Reserve Price | Earnest Money Amt. |
|---|---|---|
| **SINGATHAKURICHI TO CHEKKARAKUDI ROAD, SINGATHAKURICHI VILLAGE & PANCHAYAT, KARUNGULAM PANCHAYAT UNION, SRIVAIKUNTAM TALUK, THOOTHUKUDI DISTRICT,** Survey Nos. 336/1, 343/2, 358/2, 361/3, 362/1C, 365, 370/1, 370/2, 373/1, 374,375/1, 384/1A, 384/1B, 385/2, 386/1, 407/1, 407/2, 408/1B, 408/2, 413/1A, 419/3A, 423/1, 423/2, 428/1A, 429/1, 429/2, 429/3, 429/4, 654/2, 658/2B, 685/2, 696, 700/1 PT., 704/1A, 712/2A2, 714/1A3, ( Vacant Land 55.80 Acres) TOTAL – 55.80 Acres | Rs. 76,44,488/- | Rs. 7,64,448/- |

**Terms and Condition of the E-Auction are as under**

1. E-Auction will be conducted on **"AS IS WHERE IS", "AS IS WHAT IS" AND "WHATEVER THERE IS BASIS"** as such sale is without any kind of warranties and indemnities through approved service provider **M/s. 4CLOSURE.**
2. The highest offer received from E-Auction will be declared successful. The Liquidator reserves the right to choose in announcing the successful bidder based on the highest bid received.
3. The EMD shall be payable through DD/NEFT/RTGS in the account of **Deepsea Developers Private Limited In Liquidation Account, A/c. No. 510909010138984 Bank and Branch: City Union Bank Limited Anna Salai Branch and IFSC Code: CIUB0000049**
4. The Bids can be submitted through email or can be submitted at the Liquidator's office before 6.00 PM on Monday, 05th December 2022. The bid form can be downloaded from the website of **WWW.BANKAUCTIONS.IN**
5. Last date and time of submission of EMD & Tender documents is 6.00 p.m. on **Monday, 05th December, 2022.**
6. The date and time of e-Auction on **Wednesday, 07th December, 2022 between 03.00 P.M and 04.00 P.M.**
7. If any offer is received within the last 5 minutes of closure time, the biding time will be extended automatically by another 5 minutes and if no higher bid is received within in the extended 5 minutes, the auction will automatically get closed at the extended 5 minutes.
8. The intended bidder who have deposited EMD and require assistance in creating login id and password may contact the liquidator office on phone 044 - 28528292, 42606292 through email at **fcs.rms@gmail.com** & for technical support, you can contact Mr. Subbarao @ 08142000061
9. The EMD amount of unsuccessful Bidders will be refunded within one week.
10. The bidder who submits highest offer (more than Reserve Price) on closure of online auction shall be declared successful bidder subject to approval by the Liquidator. The liquidator reserves his rights to reject any or all of the offers or accept offer for one or more properties received without assigning any reasons whatsoever at any stage.
11. If none of the intended bidder participating in the E-Auction has not increasing the bid amount, the EMD amount of the bidders will be forfeited.
12. Upon confirmation of sale, the purchaser shall deposit 25% of sale price (including EMD) immediately and the balance sale consideration within 90 days of the date of such demand, provided that payment made after 30 days shall attract interest at the rate of 12% as per Sub Regulation 12 of Regulation 1 of Schedule I of IBBI (Liquidation Process) Regulations 2016 as amended from time to time.
13. The sale shall be cancelled if the payment is not received within 90 days and the amount paid will be forfeited. For more particulars about e-auction, the bidders are requested to go through the tender form thoroughly.
14. The highest bidder would bear the applicable GST, charges/fees payable for ownership transfer, registration fee etc., as applicable under law. The Liquidator will not be responsible for any charge, lien under sale. The Liquidator has absolute right to accept or reject the bid or adjourn, postpone, extend the auction without assigning any reasons whatsoever. No objections will accrue to the Liquidator in such an event.
15. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam, Liquidator (044-28528292, 42606292).
16. Further inquiries, if any and/or terms and conditions for sale can be obtained from the Liquidator office at phone numbers mentioned above.
17. The advertisement will be valid for 90 days from the date of advertisement. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam (044 - 28528292, 42606292)

Sd/-
**Date:** 19.11.2022
**Place:** Chennai
**CHANDRAMOULI RAMASUBRAMANIAM**
**(C.RAMASUBRAMANIAM)**
LIQUIDATOR- DEEPSEA DEVELOPERS PRIVATE LIMITED
'RAJI', 3B1, 3rd Floor, Gaiety Palace, No. 11, Blackers Road, Mount Road, Chennai-600002.
**Email:** fcs.rms@gmail.com, srinidhicra@gmail.com | **Contact No:** 044 - 28528292, 42606292
**AFA Valid upto:** 13.11.2023

**UNIMONI FINANCIAL SERVICES LIMITED**
RO: N.G. 12 & 13 Ground Floor, North Block, Manipal Centre, Dickenson Road, Bangalore - 560 042. CIN No.U85110KA1995PLC018175

**PUBLIC NOTICE**

This is to inform the Public that Auction of pledged Gold Ornaments will be conducted by UNIMONI FINANCIAL SERVICES LIMITED on 22.11.2022 at 10:00 am at 412/A, N T Complex Mundagan Street, Near Town Sbi Branch, Virudhunager - 626123. The Gold Ornaments to be auctioned belong to Loan Accounts of our various Customers who have failed to pay their dues. Our notices of auction have been duly issued to these borrowers. The Gold Ornaments to be auctioned belong to Overdue Loan Accounts of our various Customers mentioned below with branch name.

**Loan Nos: COLACHEL (COL) 1947129.MARTHANDAM (MARD) 1951869.NAGERCOIL (NAG) 1918806, 1949758.TIRUNELVELI (TIN) 1930613, 1932668, 1945525, 1949246, 1953905.TUTICORIN (TUT) 1951450, 1963770, 1965058, 1965961**

For more details, please contact : **Mr. BADMARAJ J - 8870455933**
(Reserves the right to alter the number of accounts to be auctioned &/ postpone / cancel the auction without any prior notice.)

**Canara Bank — UVARI BRANCH**

**POSSESSION NOTICE**
**(FOR IMMOVABLE PROPERTY)**

WHEREAS the undersigned being the Authorised Officer of CANARA BANK under Securitisation And Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002 (Act 54 of 2002) and in exercise of powers conferred under Section 13 (12) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules 2002, issued a Demand Notice dated **29.08.2022** calling upon the **borrower cum mortgagor Mr.Joseph Sridhar and guarantor Mrs.M.Antony Ezhilarasi** to repay the amount mentioned in the notice being of **Rs.25,22,122.97/-** together with interest, within 60 days from the date of the notice.
The borrower having failed to repay the amount, notice is hereby given to the borrower and the public in general that the undersigned has taken possession of the property described herein below in exercise of powers conferred on him under Sub Section (4) of Section 13 of Act read with Rule 8 of the Security Interest (Enforcement) Rules, 2002 on this **17th day of November 2022.**
The borrower in particular and the public in general are hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of CANARA BANK, UVARI BRANCH for an amount of **Rs.25,92,443.97/- (Liability as on 26.10.2022)** and interest thereon from **27.10.2022** + cost.
The borrower's attention is invited to provisions of sub Section (8) of Section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets.

**SCHEDULE OF ASSETS**

**Item No.1:** All the part and parcel of property and building situated at Palayamkottai Registration District, Tisayanvillai Sub - Registration Jurisdiction, Radhapuram Taluk, Karaichuthu Uvari Village, Chils Jesus Nagar S. No. 346/1A2A2C, plot number 14, 0.18.50 hectare in which 46 cents in which on the extreme east – 142.15 sq.m. **Boundaries:**
**North:** Plot Number 13 **East:** Uvari to Tisaiyanvilai Main Road
**South:** 16 ft East –West Pathway **West:** Plot Number 15

**DATE : 17.11.2022** — **Authorised Officer**
**PLACE: Uvari** — **Canara Bank**

**Muthoot Finance** — **GOLD AUCTION NOTICE** — **GSTN - 33AABCT0343B1Z5**

Registered Office: 2nd Floor, Muthoot Chambers, Banerji Road, Kochi-682 018, Kerala, India. CIN:L65910KL1997 PLC011300, Ph:+91 484 2396478. 2394712, Fax:+91 484 2396506. mails@muthootgroup.com, www.muthootfinance.com

Notice is hereby given for the information of all concerned that Gold Ornaments pledged with under mentioned branches of the company, which were overdue for redemption and which have not been redeemed so far in spite of repeated notices, will be auctioned at the concerned branches on **28.11.2022** at **10.00 AM**. In any case if the auction could not be conducted on the above said date, the Auctioneer is having the right to postpone the auction to following 2nd auction dates or on subsequent dates at given centers without any further notice. Any change in auction date will be published at the place of auction.

**2nd Auction Date : 05.12.2022, 10:00AM, Auction Centre : Muthoot Finance Ltd, 12, Ground Floor, Near Canara Bank, Tooveypuram Main Road, Thoothukudy - Tooveypuram, Thoothkudi, Tamil Nadu-628003 (Thoothkudi District)**

ALWARTHIRUNAGARI - (TN)(4280)- MAL- 8401, MDL- 186, 226, MHL- 480, 493, 505, 508, 553, 569, 597, 634, 657, 697, 742, MSL- 15138, 15450, 15681, TKM- 109, BOOPALARAYARPURAM(1229)- MAL- 11258, 13284, MSL- 26593, TKM- 50, ERAL(0349)- MAL- 22057, MSL- 53004, 53106, 53142, 53358, 53751, 54078, KALUGUMALAI - (TN)(4029)- MAL- 6872, 9394, 9790, 11113, MSL- 7472, TKS- 93, 174, KAYALPATTINAM(0875)- MAL- 14101, 14595, 14636, 14725, MBL- 5941, MDL- 84, 85, 88, 92, 110, 111, 114, MSL- 30584, 31956, 32259, 32327, 32371, 32560, 32647, TKM- 47, TKS- 121, 177, KAYATHAR(0535)- MAL- 6788, 8505, 9504, 9595, 9700, 9706, MML- 2036, MSL- 12415, 12583, TKM- 514, 632, TKS- 249, KOVILPATTI - NEW ROAD(1230)- MAL- 5803, 6686, MHL- 53, 67, 120, MML- 1693, MSL- 15095, 15396, 18142, 18321, KOVILPATTI BAZAR (TN)(1707)- MDL- 72, MSL- 9326, 9334, 9341, KOVILPATTY(0193)- BTN- 50, MAL- 11985, 12729, 12766, 13204, 13262, 13371, MDL- 66, MSL- 31296, 31356, KURUMBUR - (TN)(3525)- MBL- 4371, MDL- 72, 83, MSL- 13105, 13214, 14427, 15257, 15540, 15866, 15929, SRS- 1, 2, 3, 8, 10, TKM- 182, NAZRETH(0327)- MAL- 17121, 17142, MDL- 136, MSL- 43478, 44187, 44263, TKM- 365, PUDUKOTTAI-THOOTHUKKUDY DIST(0876)- MAL- 6627, 11817, MDL- 81, 149, MSL- 12777, 12873, 12952, TKM- 338, PUTHIAMPUTHUR (TN)(1703)- MAL- 5699, MHL- 70, TKM- 205, 212, SAWYERPURAM-(TN)(2389)- MAL- 11562, 12027, MDL- 96, 141, MSL- 16695, 16798, 17582, 17664, 17722, TKM- 354, TKS- 302, SRIVAIKUNDAM(0568)- MAL- 22303, 22646, 22729, 23566, 23861, MHL- 64, 139, 183, 206, 430, MML- 3879, MSL- 33871, 33922, 33941, THOOTHUKKUDI-BEACH ROAD(2227)- MSL- 15421, TKS- 53, THOOTHUKUDI-3RD MILE(2275)- MAL- 14260, 14545, 14689, 14719, MDL- 122, MSL- 19743, TKM- 386, 464, 472, THOOTHUKUDY - VOC MARKET(0514)- MAL- 25373, 26370, MDL- 253, MHL- 125, 236, 265, MSL- 67924, 71385, SRS- 4, THOOTHUKUDY - NEW BUS STAND(4069)- MSL- 12814, 12845, THOOTHUKUDY - SUBBIAH MUDALIYARPURAM(4006)- MAL- 7154, 7716, THOOTHUKUDY - TOOVEYPURAM(3369)- MHL- 122, MSL- 15437, 15477, TKS- 124, TUTICORIN(0206)- MHL- 267, MSL- 88489, 88522, 88640, 88670, 88686, TKM- 188, 412, 416,

Spurious / Low Quality Accounts Details:- ALWARTHIRUNAGARI - (TN)(4280)- MSL- 16508, BOOPALARAYARPURAM(1229)- MAL- 13110, ERAL(0349)- MSL- 53532, KAYATHAR(0535)- MHL- 398, KOVILPATTI - NEW ROAD(1230)- MSL- 19107, KOVILPATTI BAZAR (TN)(1707)- MHL- 505, KOVILPATTY(0193)- ZIL- 222, SAWYERPURAM-(TN)(2389)- MHL- 135, 166, THOOTHUKUDI-3RD MILE(2275)- MSL- 21044, THOOTHUKUDY - VOC MARKET(0514)- MHL- 1874, THOOTHUKUDY - NEW BUS STAND(4069)- MSL- 13771,

**2nd Auction Date : 03.12.2022, 04:00PM , Auction Centre : Muthoot Finance Ltd, 36/A, East Moola Veethi, Near Bombay Store, Upstairs Of Lakshmi Vilas Bank, Tenkasi., Tirunelveli, Tamil Nadu-627811 (Thenkasi District)**

ALANGULAM - MAIN ROAD(3344)- MAL- 14891, 15802, 15919, 15922, 15953, 16251, 16268, 16270, 16290, 16329, 16349, 16399, 16404, 16432, 16494, MHL- 29, 63, 113, 156, MSL- 17061, 17149, 17368, 17429, 17499, 17507, 17749, TKS- 186, ALANGULAM(0654)- MAL- 19186, 19196, 19209, MSL- 24334, 24413, 24507, 24594, 24850, 25119, SRS- 23, 24, 25, 27, 32, IDAIKAL - (TN)(4349)- MAL- 12324, 12332, MDL- 73, MSL- 12816, KADAYAM(0388)- MAL- 17398, 17476, 17547, 18613, 18686, MDL- 100, MHL- 219, 246, MSL- 32702, 33910, KADAYANALLOOR(0146)- MAL- 15753, 17037, MSL- 45572, 45577, 45578, 45609, SRS- 24, KADAYANALLUR-KRISHNAPURAM(2645)- MDL- 68, 102, MSL- 10018, 10209, TKS- 107, KILAPAVOOR - (TN)(3837)- MHL- 31, 301, MSL- 11523, TKM- 71, PAVOORCHATHRAM(0363)- MAL- 20614, 20648, MDL- 269, MHL- 193, MSL- 29978, 32037, 32118, 32213, POTTALPUDUR-(TN)(4391)- MAL- 6752, MHL- 148, TKM- 98, TKS- 97, PULIANKUDY(0270)- MAL- 14655, 16628, 17405, 17406, MDL- 80, MSL- 41988, 42635, 42755, 43288, 43327, 43342, TKS- 100, 216, SANKARANKOIL - MAIN ROAD(3180)- BTB- 66, MAL- 12941, 13715, 13776, 14143, 14227, 14402, 14403, 14521, MDL- 161, MSL- 19369, 19473, 19627, 19633, 19797, 19922, 20026, 20074, 20076, 20089, TKS- 269, TTB- 110, VGL- 5, SANKARANKOVIL(0165)- MAL- 14974, 15397, 15520, 16154, MDL- 37, MHL- 125, MSL- 29165, TKS- 186, SERNTHAMARAM(1412)- MAL- 13671, 14058, 14699, 14739, MSL- 21528, 21536, SRS- 14, TKM- 150, SHENCOTTAI - BUS STAND(3905)- MAL- 13933, MSL- 17377, 17416, 17497, 17701, 17955, 17991, 18046, 18278, 18323, 18353, SRS- 1, SHENKOTTAI(0269)- MAL- 29487, 33421, 33438, 35688, 36823, 36825, MSL- 36167, 36214, 36487, 36673, 36944, SRS- 19, SIVAGIRI(TN)(1988)- BTB- 384, MAL- 16393, 17003, 17573, 17635, 17717, 17878, 17952, MSL- 17331, 17534, 17769, 17773, 17802, 17814, 17836, 17988, 18184, 18205, 18212, TKS- 307, VGL- 3, SURANDAI(0233)- MAL- 20915, 22406, 22635, MDL- 69, 77, MHL- 147, MSL- 39778, 40156, 41127, 41128, 41353, 41456, TKM- 272, TTB- 32, TENKASI-EAST AVANIMOOLA VEETHI(2789)- MAL- 7744, MSL- 15887, TENKASI-MAIN ROAD(1333)- MSL- 14695, 14743, 14858, TKS- 176, THENKASI - OLD BUS STAND(0133)- MAL- 22569, 23331, 23712, MSL- 35671, 35682, 35934, 36067, 36094, 36389, 36392, SRS- 5, TKS- 379, THENKASI BAZAR(0241)- MAL- 10368, MDL- 52, MSL- 25162, UTHUMALAI(1499)- MDL- 72, 88, 101, MHL- 36, 136, MSL- 12151, 12226, TKM- 206, VADAKARAI - (TN)(3367)- MAL- 17697, 18088, 20400, 20704, MDL- 93, MSL- 20175, 20475, 20710, 20761, 20765, VASUDEVANALLUR(0574)- MAL- 9045, 13578, 14741, 14795, 15431, MDL- 126, MSL- 25483, 25716, 25741, 26032, 26057, 26067, 26069,

Spurious / Low Quality Accounts Details:- ALANGULAM(0654)- MSL- 22240, 22261, IDAIKAL - (TN)(4349)- MAL- 12511, KADAYANALLUR-KRISHNAPURAM(2645)- MSL- 10538, PAVOORCHATHRAM(0363)- TMS- 129, PULIANKUDY(0270)- MSL- 43310, SIVAGIRI(TN)(1988)- SRS- 76, THENKASI - OLD BUS STAND(0133)- MSL- 35616, THENKASI BAZAR(0241)- MAL- 10799, UTHUMALAI(1499)- MAL- 13035, VADAKARAI - (TN)(3367)- MSL- 20600, SRS- 65, VASUDEVANALLUR(0574)- MAL- 15809, 16375, MHL- 517, TMS- 123,

**2nd Auction Date : 03.12.2022, 10:00AM , Auction Centre : Muthoot Finance Ltd, Vijaycourt,28,1st Floor, Thiruchendur Road, Palayamkottai-Murugankurichi(Tn), Tirunelveli, Tamil Nadu-627002 (Thirunelveli District)**

AMBASAMUDRAM(0244)- MAL- 25621, 25635, 25690, 25934, 25947, MDL- 235, MHL- 753, 847, 990, 1331, MSL- 70991, 71985, 72106, 72136, SRS- 22, 79, 81, 82, 84, 94, 99, 101, CHERANMAHADEVI - (TN)(3093)- MAL- 13376, 15495, 15522, 16314, 16734, MDL- 55, 69, MSL- 33924, 34956, 35075, 35384, 35890, 35901, 35923, TKM- 307, TKS- 462, KALLIDAIKURICHI(0643)- MAL- 14494, 17265, 20179, 20207, 20557, 21901, MHL- 83, 278, MSL- 38557, 38692, 38694, 38696, 38711, 38727, TKM- 201, MANUR - (TN)(3450)- MAL- 18125, 18942, 20031, 20791, MDL- 44, 62, 83, 107, MSL- 14286, 14399, 14711, 14760, TKS- 141, 385, MELAPALAYAM(0364)- MAL- 21207, 26770, 27387, MBL- 14590, MDL- 218, 238, MHL- 107, 250, 262, 345, 398, 526, 625, 642, MSL- 71658, 71659, 72020, 72366, 72415, 72420, 72727, 73114, 73122, 73126, 73332, SRS- 64, TKM- 931, TKS- 398, MOOLAIKARAIPATTI - (TN)(5027)- MAL- 1548, TKM- 225, 228, TKS- 91, 162, 166, MUKKUDAL-(TN)(2490)- MAL- 20584, 22442, 22904, MSL- 26293, 28927, 29580, 29645, 29661, 30010, 30017, 30108, TKM- 120, PALAYAMKOTTAI(0262)- BTN- 158, MAL- 28818, 29761, MSL- 74037, 74283, 74959, 75633, 75807, 75832, 75840, 75850, 75878, 76168, 76486, 76522, TKS- 587, 629, PALAYAMKOTTAI-MURUGANKURICHI(TN)(1574)- MSL- 16362, 16450, 16561, TKM- 230, SANKAR NAGAR - (TN)(4637)- BTB- 63, MAL- 5225, MDL- 101, 111, 133, MSL- 9256, 11281, 11340, 11671, 11706, 11904, 11906, 11948, 11965, 11984, SRS- 18, 24, TKM- 7, TKS- 295, THIRUNELVELI JUNCTION(0417)- MDL- 96, MSL- 45505, 45733, 45857, 46323, TKM- 204, THIRUNELVELI TOWN(0156)- MAL- 11075, 16734, MDL- 98, MSL- 73394, 73842, 73875, 74061, 74176, 74324, TKS- 203, THIRUNELVELI-PETTAI(1620)- MAL- 26031, 26986, 27174, MDL- 123, 140, MSL- 34229, 34792, 34877, 35098, 35193, 35218, 35391, 35485, 35521, 35614, TKS- 451, 458, 496, TTB- 269, TIRUNELVELI - ANNA NAGAR(3239)- MSL- 14600, 14900, 14971, TIRUNELVELI - THIYAGARAJA NAGAR(3403)- MAL- 5932, MHL- 97, MSL- 14024, 14592, 14605, 14606, SRS- 9, 10, TKS- 288, TIRUNELVELI V M CHATRAM(1131)- MAL- 17395, 20774, 22726, MBL- 9722, MDL- 153, MHL- 56, MML- 2034, MSL- 43488, 43740, 44818, 45698, 45890, 46117, TKM- 628, TIRUNELVELI-COURTALLAM ROAD(2081)- MAL- 10181, MDL- 51, MSL- 12903, 15690, 15846, TKS- 210, 226, TIRUNELVELI-NEW BUS STAND(2646)- MAL- 6473, 6952, MDL- 108, MSL- 22428, 23594, 23653, 23684, 23732, TKM- 558, V.K.PURAM ( VIKRAMASINGAPURAM)(0791)- MAL- 20021, MBL- 9991, MHL- 74, 80, MSL- 36451, 36535, 36636, 36777, 37378, 37657, 37857, 38087, TKM- 344, VANNIKONENDAL - (TN)(4464)- MAL- 4779, MBL- 1151, MDL- 54, MSL- 6007, 6739, 6996, 7022, TKM- 116, TKS- 51, 64, VEERAVANALLUR - (TN)(2138)- MAL- 17556, MHL- 172, 181, 275, 340, 348, MSL- 26794, 30220, 30459,

Spurious / Low Quality Accounts Details:- AMBASAMUDRAM(0244)- MSL- 75468, MANUR - (TN)(3450)- MBL- 17902, PALAYAMKOTTAI(0262)- MAL- 29903, SAMATHANAPURAM - (TN)(5170)- MHL- 165, MSL- 491, 535, 547, 611, SANKAR NAGAR - (TN)(4637)- MSL- 13071, THIRUNELVELI JUNCTION(0417)- MAL- 14084, THIRUNELVELI-PETTAI(1620)- MML- 14043, 15184, TIRUNELVELI - ANNA NAGAR(3239)- MHL- 919, MSL- 14087, 14364, TIRUNELVELI - THIYAGARAJA NAGAR(3403)- MAL- 6686, V.K.PURAM ( VIKRAMASINGAPURAM)(0791)- MAL- 22237, VEERAVANALLUR - (TN)(2138)- MAL- 18934,

Note: Customers can release the gold ornaments before the auction date (28.11.2022).
Note: Bidders are requested to produced Identity Card / Pan Card No./GST Certificate. (Incase Registered Dealers)
Successful bidders should transfer the full auction amount by RTGS

**Place : THIRUNELVELI** — **For Muthoot Finance Ltd,**
**Date : 19.11.2022** — **A.Mahadevan Pillai, Advocate / Govt. Auctioneer, BRINDHAVAN, 628, B, T.V.M. Road, Krishnankoil, Nagercoil-629001, Kanyakumari District, Tamil Nadu**